306

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

306
6 - FEB 1946

Venkatachalam S. 1941-43.

Editor & Publisher: ... Lourduswami, B.A., L.T.
R.C. ... ing School, Trichinopoly.

JL
N211, N11PP
N46.36.7
2 10,007

கொ... ...வரி, 1946 மலர் 7

R. C. ... முறை பாடசாலை, திருச்சினப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 2.

போதனு விஷயப் பூங்கொத்து

கொத்து 36] 15 ஜனவரி 1946 [மலர் 7

பத்திராதிபர் குறிப்புகள்

We wish all our Subscribers and well wishers a most Happy and Prosperous New Year.

நம் அன்பார்ந்த பழைய, புது மாணவர்கட்கும், சந்தாதாரர்களுக்கும், ஏனைய நம் "பூங்கொத்து" நேயர்கட்கும் எமது புதுவருட வாழ்த்தும் நன்றியும் உரிமையாகுக.

இதுகாறும் நம் நேயர்கள் நம் "பூங்கொத்தைப்" பரிவுடன் போற்றிவந்திருப்பதுபோல் இனியும் ஆதரித்தும், விஷயதானம் புரிந்தும், புது சந்தாதாரர்களைச் சேர்த்தும் "பூங்கொத்தைப்" போற்றிவருவார்களாக. இச்சந்தர்ப்பத்தில் மற்றுமோர்முறை எமது மனமுவந்த நன்றியை அனைவர்க்கும் தெரிவித்துக்கொண்டு எம் வாழ்த்துகளை இதன்மூலம் கூறுகின்றோம்.

* * * *

T. S. L. C. பரீட்சை 1946.—இப்பரீட்சை வழக்கமாய் மார்ச்சு மாதத்திலேயே நடைபெற்றுவந்திருக்கிறது. ஆனால் இவ்வருஷம் ஏப்பிரல் மாதம் முதல் தேதியில் தொடங்கி 1, 2, 3, 4 தேதிகளில் நடைபெறும். எனவே இதுபற்றிய பரீட்சைகால அட்டவணை முதலிய விவரங்கள் பின்னால் அறிவிக்கப்படும்.

'பூங்கொத்து'

காரியாலய அறிவிப்பு

'பூங்கொத்து' சந்தாத்தொகையை அனுப்புகிறவர்கள், தயவுசெய்து தங்கள் சந்தா நெம்பரை குறித்தனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தா நெம்பர் தங்கள் விலாசத்தின் இடதுபக்கம் பிரதிமாதமும் குறித்தனுப்பப்படுகிறது.

விலாச மாறுதலில், பழைய விலாசத்தையும் புது விலாசத்தையும் குறித்தனுப்பவேண்டியது.

பத்திராதிபர்

புதுவருட வாழ்த்துப் பா

[P. Marimuthu alias Mariasusai]

உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்
அலகில்சோதியனன் புருவானவன்
மலமில்மாமரி மணிவயிற்றுதித்து
நிலமிசைமாந்தர் நெறிவிடுத்ததனால்
பவவிருளுலகில் பரவிநின்றதனால்
அவமேயழிந்து ஆரிருளடையும்
சீவர்களுய்யத் திருச்சபைநிறுவ
தேவனதருளால் சேசுபிறந்து
நூறுபத்தொடும் நாற்றொன்பதினுடன்
வேறுபத்தொடும் விளங்கிவாண்டில்
சீர்பெற்றிலங்கும் திரிசிரநகரில்
ஆர்ஸிட்ரெயினிங் பாடசாலையிலே
தோன்றியதெதுவெனில் சொல்லக்கேளீர்
ஆன்றோர்களது அவ்வமதியினில்
வெளிவருபோதனா விஷயப்பூங்கொத்
தெளியேணிதனில் எடுத்துக்கூறும்:—
இப்பத்திரிக்கைக் கல்வித்துறையில்
முப்பத்தாறுண் டுழைத்துநமக்கு
கழிதொல்லாண்டு கடந்தோமினிமேல்
விழிமின்எழுமின் உழைமின்என்றே
சொல்லும்புத்தாண்டு வாழிமேற்
செல்லும்நெறியா ரெல்லாம்வாழி

விடுகதைகள்

இது என்ன?

1. எருமைக்கடா உப்ப, உப்ப; ஏரி நீர் வற்ற, வற்ற
கருப்புசாமி வாகுபாடி,— போர்டு ஸ்கூல் மாணவன்.

2. தேர் அசைய அசைய; பூ உதிர உதிர
ரங்கநாயகி மாணவி, ஷி பாடசாலை.

3. சின்னப் பையன் ஓடி ஓடி முள் அடைக்கிறான்
தனலெக்ஷிமி மாணவி, ஷி பாடசாலை.

4. ஒருவன் மைக்குத்தி சோறுக்கி—மைகறந்து பால்காய்ச்சி—கையரிந்து சமயல் செய்யும் காரிழையே, உன் கணவன் எங்கே?

பெண் அவர் இறந்தவனைத் தோள்பட்டு, சுட்டவனைச் சுடப் போயிருக்கிறார். நீர் வந்தால் வரமாட்டார், நீர் வராவிட்டால் வருவார்.

S. K. பெருமாள்.

6 - FEB 1946 MADRAS

போதனாமுறையும், பவணந்தி முனியும்

(M. A. S., T. P.)

கொத்து 36. மலர் 5, 6 பக்கம் 77-ன் தொடர்ச்சி.

1. ஆசிரியன் "புவிபோன்றிருத்தல் வேண்டும்" என்றவர், புவிக்கும் ஆசிரியருக்கும் கூறும் பொருத்தமாவன. "புவியானது தெரிதற்கரிய பரப்பும் ஆற்றலும், தன்னை உழுதல் முதலிய தொழில்களால் உரங்கிண்டவரையும் பொறுத்தலும் அவரவர் செய்யும் பருவமுயற்சிகட்கேற்றவாறு பயனளித்தலும் உடையது. அதுபோல ஆசிரியன் தெரிதற்கரிய கல்வி நிலையும் சொல்லாற்றலும், மனம் வருந்துவன செய்யும் மாணவரைப் பொறுத்தலும், அவரவர் செய்யும் காலமுயற்சிகட்கு எற்றவாறு கலைப்பயனளித்தலும் உடையனாதல் வேண்டும்; இதனால் ஆசிரியன் புவிபோறல் வேண்டும்.

2. ஆசிரியன் மலைபோன்றிருத்தல் வேண்டும் என்றவர், மலைக்கும் ஆசிரியருக்கும் கூறும் பொருத்தமாவன. மலையானது, அளந்தறியப்படா உயரமும் எண்ணிடப்படாத பலவகைப் பொருளும், அசைக்க முடியாத நிலையும் நெடுந்தூரத்துள்ளோர்க்குத் தெரியும் தோற்றமும், மழைவளங்குன்றிய காலத்தும் சுனைவளந் தரும்பண்பும் உடையது.

அஃதேபோன்று ஆசிரியன் அளந்தறியப்படாத கலையுயற்சியும் எண்ணற்ற கலைத்தேர்ச்சியும் தம்மோடு எத்தகைய வாதம் செய்தார்க்குங் கலங்கா நிலையும், நெடுந்தூரத்துள்ளாரும் அறியும் புகழும், மாணவரிடத்திருந்து பொருள் வருவாய் குறைந்த காலத்தும் தம்மிடத்துள்ள நூற்பொருளை இல்லையென்னாதளிக்கும் வள்ளன்மையும் ஆசிரியன் இன்றியமையாக் குணங்களாகக் கோடற்குரியவனாதலின் மலையைப்போன்று ஆசிரியன் இருத்தல் வேண்டும் என்று கூறுகின்றார்.

(தொடரும்)

21000

விடுகதை விடை

(கொத்து 36, மலர், 5-6, பக்கம் 84)

விடை:—தண்ணீருக்குப் பகையான மரம்—தேற்றாங்கொட்டை மரம். முள்ளுக்குப் பகைசாத்துகிறவர் — சக்கிலியர். மூவர் இருகால்களுடன்—கொர்ப்பிணி ஸ்திரீ கைக்குழந்தையுடன். கொன்றவன்—பாம்பு. சுட்டவன்—மரம்.

ஷ விடையளித்தவர்கள்:—(1) M. Krishnamurthi, S. 2. (2) S. Arokiasamy, Konnaikudi. (3) S. Arpudasamy, R. C. Sch. Puthur. (4) P. Arulanandam, E. 1 B. (5) S. Adaikalam, E. 2 A. (6) S. K. Perumal.

ஆசை செய்த மோசம்

[D. Nathan]

வேழமுடைத்து மலைநாடு என்னப்பட்ட சேரநாடு அப்போது களிறனைய காளையர் பலரைப்பெற்றிருந்தது. அவ்வீர மக்களின் வேந்தனாய் விளங்கியவன் கணைக்கால் இரும்பொறையாகும். அஞ்சா நெஞ்சும் அடக்கவொண்ணா ஆற்றலும் படைத்த அவன் பல நாடுகளையும் வென்று இறுதியாக சேரனாட்டின்மீது படையெடுத்துச் சென்றான். இரவில் திடீரென எழுந்த காட்டுத்தீயால் அச்சேனையின் பெரும் பகுதியை இழந்த அவ்வஞ்சி வேந்தன் நெஞ்சம் கொஞ்சமும் அஞ்சிடாது எஞ்சியதுகொண்டு வென்றியது காண்பன் என எதிர்த்து நின்றான். நின்றாவது என்? சோழன் செங்கணானின் கடலனைய சேனையால் கைப்பற்றப்பட்டான் காவலன்.

சங்கிலியால் கட்டப்பட்டு தன்முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்ட காவலனை நோக்கிய காவிரி நாடன் "மலையர் தலைவ! இனி நீயும் நின்படை வீரரும் எந்த நாட்டின்மீதும் படையெடுப்பதில்லை என கையறைந்து தருவையாயின் நின்னை விடுவிப்போம்" என்றனன். கேட்ட பொறையன் "நன்று! நன்று!!" என நகைத்து கடுந்தீயஞ் சாக்கரிகாலன் மருக! போரிடுதலையே பொழுது போக்காகக்கொண்ட யான் இணங்கினாலும் போராடிப் புண்படா நாளைப்புண்படா நாளாகக் கருதும் எமது படைவீரர்கள் அதற்கு ஒருபோதும் சம்மதியார். அன்றியும் அரசே! அமரகத்தடிமைப்பட்ட யான் மற்றோர் சமரகத்தே முடியைப்பெற எண்ணுகின்றேன்" என்றனன். செவியுற்ற செங்கணான் சீற்றங்கொண்டு குணவாயில் கோட்டத்தே சிறைவைக்குமாறு ஏவினான்.

சிறைப்பட்ட சேரர் தலைவன் நீர் வேட்கைமிக்கு சிறைக்காவலாளியிடம் தண்ணீர்க் கேட்டான். தம் மன்னன் இட்ட கட்டளைக்கு மாறுபட்டு நடக்க அஞ்சி அவன் மறுத்து விட்டான். பின் சற்று நேரம் சிந்தித்து "அரசே! அரசே!! மன்னிக்கவேண்டும். அமர்பல கடந்த நிகரில் வீரனும் புலமைசான்ற புலவர் தலைவனும் இரவலர் போற்றும் புரவலனும் ஆகிய தாங்கள் உயிர்க்கொடுத்து காப்பாற்ற வேண்டியவரன்றோ! அன்று புலவர்க்கும் மறவர்க்கும் பொன்னும் மணியும் முத்தும் போற்றாதளித்த புரவலன் இன்று தன் தாகந் தணியத் தண்ணீரின்றித் தவிப்பதா? அத்தகைய பேரரசன் வேண்டியும் கொடுக்க மறுத்தனன் இவன் என்ற பழியைத்தாங்கி யான் வாழ்வதைவிட மாள்வதே நன்று ஆதலின் இதோ சென்று கொணர்வேன் அதுவரை பொறுத்தருள்க"! என்றுகூறி யகன்றான். காவலாளியின் சொல் மன்னன் மனதிலோர் மாபெரும் பூசலை விளைத்து விட்டது. அப்பூசல் அவனது அழிவிற்கே அடிகோலுவதாயிற்று.

காவலாளியுமின்றித் தன்னந்தனியாய் நின்ற காவலன் மென் மேலும் குமுறிக்கொண்டெழுந்த உணர்ச்சி வேகத்தில் அலற ஆரம்பித்தான். சிங்கத்தின் கர்ஜனைப்போன்ற அவனது ஆவேசத்தை சிறைச்சாலை மண்டபத்தின் எதிரொலி அதிகப்படுத்தியது. "தோல்வி கண்டும் வாழ எண்ணும் யான் ஒரு வீரனா! மானம் வெற்றியென இரண்டு வீரனால் போற்றப்படுவது. கழிந்த பொழுதும் இழந்த மானமும் மீட்கவொண்ணாதலின் முதலில் மானத்தையும் இரண்டாவதாக மானத்தோடுகூடிய வெற்றியையும் உயிர்கொடுத்தும் காப்பவனே வீரனாவான்.

உயிருக்காக வெற்றியையும் மானத்தைவிட்ட பேடியாகிய நானா வீரன்? வீரன் வீரன் என்று இதுவரை வீண்பறை சாற்றினேன். எமது மறவர் குலம், ஆடவன் பகைவர் வாளால் வெட்டப்பட்டிருந்தாலொழிய (நோய்ப்பட்டு) சுவர்க்கம் கிட்டாது என்ற உயரிய கொள்கை உடையதாகும். அதற்காக பிள்ளை கருவிலேயே இறந்து பிறந்தாலும் தசைப்பிண்டமாய்ப் பிறந்தாலும் அதை ஆளல்ல என்றெண்ணாது வாளால் வெட்டிப் புதைத்துவிட்டு 'வாள்வாய்ப்பட்டு மடிந்த பிள்ளையை பெற்றோம் யாம்' எனப்பெருமையடைவர் பெற்றோர்கள். அவ்வாறு தசைப்பிண்டத்தைப் பெற்றவர்கள் அடையக்கூடிய பெருமையைக்கூட அல்லவா என் தாய்தந்தையர் பெற்றிலர். பெருத தோடு மட்டும் அல்ல பெரும் பழியையும் அன்றோ கொடுத்துவிட்டேன். நாயைப்போல சங்கிலியால் கட்டி இழுத்துச் செல்லப்பட்டதுமல்லாது தன் எஜமானளிக்கும் எச்சிலுணவுக்காக வாலாட்டுகின்ற அம்மிருகத்தைப்போல.........போலவல்ல உயிர்போம் பசியுடனிருப்பினும் நாய் எதிரியைக் கண்டால் குரைக்குமேயொழிய இரக்காது. ஆதலின் அதனினும் கேடாய் பகைவனிடத்திலே யாசித்துண்ணும் பாவியானேன். அந்தோ! (ஆவிற்கு நீரென்றிரப்பினும் நாவிற்கிழிந்ததில்) என்று கூறிய வள்ளுவன் வாழ்ந்த நாடு எனக்குமிடமளிக்கின்றதே இரந்துண்டு வளர்க்க எண்ணும் இவ்வுடல் அழிந்துபடட்டும். இனி இப்பழிக்கொண்டு ஒரு கணமும் வாழேன்" என்று உயிரிழக்கச் சித்தமாயினன். மயிர் நீப்பின் வாழாக்கவரிமானன்ன மன்னன் தன் மானங்காக்க வேறு மார்க்கமேது? தனது தற்கொலையின் காரணத்தை உலகறியச் செய்ய எண்ணிய வேந்தன் உடைவாளால் உடலைக்கீறி பீறிட்டெழுந்த இரத்தத்தைவிரலால் தோய்த்து ஓர் பாடலாகச் சிறைசுவரில் எழுதினான்.

இங்கு இவ்வாறாக,

சிங்கத்தை சிறைவைத்த செங்கணான் அடிமை வாழ்வே அறியாத மக்களை அடக்கி ஆள்வதோ அரிது. அடக்காது விடுதலோ அதனினும் கொடிது; என இருபாற்பட்ட மனத்தனாய் நிம்மதியற்றிருந்தான்.

அதுகாலை பொய்கையாரென்னும் புலவர் ஒருவர் அங்கு வந்து களவொழுக்கம் பற்றிய நாற்பது இனிய செந்தமிழ்ப் பாடல்களைப் பாடிமுடித்தார். செந்தமிழைச் செவிமடுத்த செங்கணான் மதுவுண்ட மதுகரம்போல் மனமகிழ்ச்சி மீதூரப்பெற்று "புலவர் பெரும்! யான் உம்மை ஊனும் தேனும் ஊட்டியளித்தும் பாலும் சோறும் பகிர்ந்தளித்தும் மனமாரப் புகழ்ந்தும் வாயார வாழ்த்தியும் புலவர் பெரும்! ஒரு பாடல் பாடவேண்டும் என வேண்டிய காலத்தெல்லாம் பாடாத நீர் இதுபோது வலிய வந்து ஒன்றிரண்டல்ல நாற்பது பாடல்களை பாடியதன் காரணம் யாதோ அறியேன். அது நிற்க, இப்பாடல்கட்கு ஏற்ற பரிசாக யான் எதைக்கொடுப்பேன். என் நாடு முழுவதும் கொடுத்தாலும் போதாதே! என்றனன். உடனே புலவர் "மன்னவா! எந்த நாட்டையும் பெறவேண்டுமென்ற எண்ணங்கொண்டு எழுந்ததல்ல இப்பாடல். ஆனால் மாண்புமிக்க மன்னவனும், மலைநாட்டார் தம் உயிர்க்கு உயிரன்னவனும் இவ்வேழைத் தோழனுமாகிய இரும்பொறையின் விடுதலையையே பரிசாகக்கொண்டதாகும்" என்றனன். கேட்ட சோழன் "நன்று, இனி அவர் உமது நண்பன் மட்டும் அல்ல! எனது நண்பனுமாகும். வாருங்கள் அழைத்து வருவோம்" என புலவரோடு சிறைச்சாலையை நோக்கி நடந்தான். கோட்டையினுள் நுழைந்த உடன் இடிமுழக்கம் போன்ற ஓசை அவர்கள் காதில் பட்டது. இருவரும் விரைந்து சிறைச்சாலையை நோக்கி நடந்தனர்.

உயிரிழக்க உளங்கொண்ட சேரன் தன் உடைவாளை உருவி "நின் மங்காத ஒளியாலே மறையாத புகழளித்த மணிவாளே! உற்ற தேகத்தை உயிர் பிரிந்தாலும் பிரியாத பெருந்துணையாய் வாழ்த்தி என் என் தந்தை வாழ்த்தியளித்த வடிவாளே!! யான் புரிந்த எண்ணரிய பல்போரில் பாண்டியனே முதலாய் பல்வீரர் தலை துணித்த படைவாளே!!! சேரர் எனும் வீரர்தம் செம்மை காக்க நின்ற செங்கதிர் வாளே!!! குலத்தைக் கெடுக்கவந்த இக்கோடரியைக்கொன்று நின் கடமையை நிறைவேற்றிக்கொள்.........ஏன்? என்ன யோசிக்கின்றாய்? இதுவரை சேரரது பெருமைக்குப் பங்கமாய் நின்ற பகைவீரர்களை வீழ்த்தினாய். இப்பொழுது அக்குலத்திற்கே கொடும் பழியைத் தேடிய பாவியை, வீரமென்பதே அறியாத பேடியை வெட்ட வேண்டியிருக்கிறதே என எண்ணுகின்றனையா!

ஆ! ஏன் உன் முகவொளி மங்குகின்றது. அளிக்க வந்த நீ அழிக்க வேண்டி வந்ததை எண்ணியா? உண்மையுணராவாளே! நீ என் பகைவர் மார்பில் பாய்கின்றபோது உன் பிரகாசத்தைக் கண்டு மகிழ்ந்ததைவிட மிக்க மகிழ்ச்சியை என் மார்பில் பாய இருக்கும் இதுபோது அடைகின்றேன். இனியும் அடைவேன். அதற்காக சிறிதும் தயங்கவேண்டாம்" என்றனன். உணர்ச்சி வேகத்தில் உயிர்தானே

சென்று விடுமோ என அஞ்சிய அவ்வாளும் தான் இதுகாறும் பிரிந்தறியா அப்பெருந்தகையின் மார்பை இருகத்தழுவிக்கொண்டது.

விரைந்து வந்த புலவரும் இரத்த வெள்ளத்திடையே புரளும் பூபாலனைச் சென்று தழுவினர். "நண்ப நான் உய்ந்தேன்" என்ற சொற்களைக் கூறி அரசனும் அகன்றான். இறக்கின்ற அவன் "பிழைத்தேன்" என்ற தன் பொருள் புலவர்க்கே புரியும் போலும்.

யோசனைக் கணக்கு விடைகள்

(கொத்து 36, மலர் 5, 6, பக்கம் 78-ன் கணக்கு)

விடைகள்.—கீழ்வரும் விடைகளில் எவையாகினும் சரியே:—
(1) சா. ஆரஞ்சு, கு. ஆரஞ்சு, சே. ஆரஞ்சு. முறையே 5, 5, 10, 6, 2, 12, 4, 8, 8.

ஷ விடையளித்தவர்கள்.—G. Gnana Davamany, Pattakulam; T. S. Vasan, Chingleput; T. Natarajan, H. M. Parthibanur; J. Sundaram, H. M. Pannankombu; D. Thangasamy, Sec. Singikulam; A. Muthusamy, H.M. Srinivasanallur; S. Muthuvanni, Kariamanikkam; J. Srinivasan, H. 2, Chingleput; N. S. Vaithilingam, VIII St., Vikravandi; K. K. Ramiah, Thogur; S. Sakkubai Ammal, Kila Adanur; D. M. Venkateswaran, Tiruvadanai; S. Vadivelu, III. F. R. C. H. School, Trichy; S. Arpudasamy, R. C. Puthur; A. S. Dharmanathan, II F.; S. Arokiasamy, Konnaikudi & S. Adaikalam; S. N. Kandasamy; M. Kulandaisamy; A. Zacharias; M. Arul & G. Arokiam of R. C. T. Sch. Trichy; Mathalaimuthu, Palamaneri; S. K. Perumal.

பாடக் குறிப்பு

வகுப்பு III. நேரம் : 40 நிமிஷம்.

பாடம் : இயற்கைப்பாடம்.

பாகம் : பூக்கள். (பொது விவரங்கள்)

போது நோக்கம் : இயற்கைப் பொருள்களை ஆராய்ந்தறிவதில் ஆர்வம் உண்டாக்குவதும், அவற்றின் அழகை உணர்ந்து, மகிழச் செய்வதும்.

சிறப்புநோக்கம் : பூக்கள் நிறம், மணம், உருவம், பருமன், அழகு முதலியவற்றில் வித்தியாசப்படுகின்றன என்பதை உற்று நோக்கி அறிதல்.

உபகரணங்கள் : உலாவச்சென்று சேகரித்துள்ள பூக்கள்,— மல்லிகை, ரோஜா, (அல்லது செவ்வரளி), பூவரசம்பூ, பூசணிப்பூ, கத்தரிப்பூ, புடலம்பூ முதலியன.

விஷயம்	முறை
1. **பீடிகை :** (*a*) செடியின் பாகங்களாகிய வேர், தண்டு, இலை, பூ, காய் இவற்றில் பூவே அதிக அழகுள்ளது. (*b*) அழகுள்ளதும், வாசனையுள்ளதுமான பூக்களைத் தலையில் வைத்துக்கொள்ளுகிறோம். பூசைக்கு உபயோகிக்கிறோம். (*c*) இப்பொழுது சில பூக்களின் நிறம், மணம், முதலியவற்றை ஆராய்ந்தறிவோம்.	(*a*) தொட்டியில் வளரும் பூவோடுகூடிய செடியைக் காட்டி, பாகங்களைக் கேட்டு, பூவே அதிக அழகுள்ளது என்பதை வருவிக்கவும். (*b*) பெண்கள் தலையில் பூ வைத்திருந்தால் காண்பிக்கவும். (*c*) நோக்கத்தைக் கூறவும்.

2. புதிய பாடம் :—

பூவரசம்பூ—பூவரசமரம்—நிறம் : மஞ்சள், அடியில் சிவப்புப் பொட்டு. மணம் : இல்லை. வடிவம் : மணி. பருமன் : பெரியது.

பூசணிப்பூ—பூசணிக்கொடி—நிறம் : மஞ்சள், மணம் : ஒருவித வாசனை. வடிவம் : கிண்ணம். பருமன் : பெரியது.

புடலம்பூ—புடலங்கொடி—நிறம் : வெள்ளை. மணம் : ஒருவித வாசனை. வடிவம் : நீண்ட வடிவம். பருமன் : மெல்லியது.

[library stamp]

கத்திரிப்பூ—கத்திரிச்செடி—நிறம்: ஊதா. மணம்: இல்லை வடிவம்: இல்லை. பருமன்: சிறியது.

மல்லிகைப்பூ — மல்லிகைச்செடி — நிறம்: வெள்ளை. மணம்: அதிக வாசனை. வடிவம்: இல்லை. பருமன்: சிறியது.

ரோஜாப்பூ—ரோஜாச்செடி—நிறம்: வெளுத்த சிவப்பு. மணம்: நல்ல வாசனை. வடிவம்: அகன்ற வடிவம். பருமன்: பெரியது.

முறை: பாடத்திற்கான பூக்களைப் பிள்ளைகளின்முன் அவரவர் சிலேட்டில் வைக்கவும். பிள்ளைகள் கைகளை முதுகுக்குப்பின் வைத்துக்கொள்ளவும். 'ஒன்று' என்றால் ஆசிரியர் காட்டும் புஷ்பத்தை அவர்கள் தொடவேண்டும். 'இரண்டு' என்றால் எடுத்துப் பரிசோதனை செய்யவேண்டும். 'மூன்று' என்றால் கீழே வைத்துவிடவேண்டும். இந்த டிரில் முறைப்படி எடுக்கப் பழக்கவும்.

ஒவ்வொரு பூவைப்பற்றியும் பிள்ளைகளைக் கேட்டு வருவித்து முன்பக்கத்திலுள்ள அட்டவணையிற்போல் கரும்பலகையில் எழுதவும்.

விஷயம்	முறை
புஷ்பங்கள் நிறம், மணம், வடிவம், இவைகளில் வித்தியாசப்படுகின்றன. ஆனால், ஒரேவிதச் செடியின் பூக்கள் ஒரேவித நிறம் மணம், வடிவம் உள்ளனவாக இருக்கின்றன.	அட்டவணையிலிருந்து ஊகிக்கச் செய்யலாம்.
3. ஐம்புலப்பயிற்சி: (a) நிறத்தைச் சொல்லிப் பூவை எடுக்கச் செய்தல், அதன் பெயரைச் சொல்லச் செய்தல். (b) புஷ்பங்களைப் பெரிதிலிருந்து சிறியதுவரை வரிசைப்படுத்தி வைக்கச் செய்தல். (c) கண்களை மூடிக்கொண்டு, முகர்ந்துபார்த்து, பூவின் மணத்திலிருந்து அதன் பெயரைச் சொல்லச்செய்தல்.	ஒருவன் மற்றொருவன் கண்களை கையினால் பொத்திக்கொண்டு வினவலாம். குறிப்பு: மேற்கண்ட முறையில் வேறு சில பூக்களை மற்றொரு பாடத்தில் பரிசோதிக்கச் செய்யலாம்.

நடித்தலுக்கேற்ற சம்பாஷணை

[R. Arokiam.]

ஹர்ஷர்

பாடம்: சரித்திரம். IV-ம் வகுப்பு.

காட்சி 1.

இடம்:—தனேசர் நகரம்: அரண்மனையில் ஒரு அறை.

நாடகபாத்திரங்கள்:—அரச குமாரர்கள். [ராஜ்யவர்த்தனரும் ஹர்ஷவர்த்தனரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

ராஜ்யவர்த்தனன்:—கண்ணே! ஹர்ஷ! நமது தகப்பனார் இருக்கும் வரையில் எனக்கு யாதொரு கவலையும் இல்லாமல்இருந்தது. இப்பொழுது விதியின் பயனாக அவர் காலஞ்சென்றமையால், அவருடைய ஸ்தானத்தை எப்படி வகிக்கப்போகிறேன் என்ற பயமும், கவலையும், அதிகமாய்விட்டன.

ஹர்ஷன்:—அண்ணா! க்ஷத்திரிய குலத்தில் உதித்த தங்களுக்குப் பயமேது. தங்களுக்கு இனிமேல் இருக்கவேண்டியது ஒரே ஒரு கவலைதான்.

ரா:—அது ஹர்ஷ! அதென்ன?

ஹர்ஷன்:—தங்கள் குடிகள் க்ஷேமமாயிருக்கவேண்டும் என்ற கவலை ஒன்றுதான்.

ரா:—தம்பி! நீ சொல்வது உண்மையே. (கைகுவித்து) எல்லாம் வல்ல கடவுள் எப்பொழுதும் என்னைச் செங்கோல் மன்னனாகச் செய்வாராக! [வெளியில் ஆரவாரம்]

குலகுரு, மந்திரி, முதலியோர்:—ஜய வீரசிங்கம் எங்கள் மன்னர் ராஜ்யவர்த்தனர் நீடூழி வாழ்க! வாழ்க!

அரசே, பட்டாபிஷேகத்திற்கு யாவும் தயாராயிருக்கின்றன. தயவு செய்யவேண்டும்.

ரா:—அப்படியே சித்தமாயிருக்கின்றேன். அரசன் குடிகளின் ஊழியனல்லவா?

காட்சி 2

இடம்:—தனேசர் நகரின் அரச சபை.

பாத்திரங்கள்:—ராஜ்யவர்த்தனர், ஹர்ஷர், முதியோர்.

ராஜ்யவர்த்தனர்:—ஹர்ஷ! என்ன, இன்று என் மனதில் சந்தோஷம் இல்லாமலிருக்கிறதே எப்பொழுதும் போல் இல்லாமல், மாறாக இருக்கின்றது.

ஹர்ஷர்:—எனக்கும் அப்படித்தான் இருக்கின்றது, என்ன விளையுமோ தெரியவில்லை. ஈசன்தான் துணை! (ஒரு தூதன் ஓடிவந்து அரசன் காலில் விழுந்து கோவென்று கதறுகிறான்).

ரா :—என்ன! நீ யார்? என்ன விஷயம்? உனக்கு யார் என்ன தீங்கு இழைத்தார்கள்? சொல்.

தூதன் :—அரசே......(விம்மி.) நான்......எப்படிச்......சொல்......வேன்......எனக்கொன்றுமில்லை......(சற்று நிதானமாக) நான் கன்னோசியிலிருந்து வருகிறேன்......

ரா :—ஹர்ஷர் : கன்னோசியிலிருந்தா! எங்கள் சகோதரி ராஜ்ய ஸ்ரீக்கு என்ன கெடுதி நேரிட்டது.

தூதன். (விம்மலுடன்) அரசே——! மாளவ——தேசத்தரசன்——எங்கள் அரசனை கொ—ன்—று தங்கள் சகோ—தரி—யை சிறையிலிட்டிருக்கிறான் கொடும்பாவி.

ரா :—(கோபாவேசத்துடன்)—மாளவதேசத்து அரசனா! என் சகோர்தரியைச் சிறையிலடைத்திருக்கிறான்! என்ன? மாளவமன்னன் எங்கள் வமிசத்தினரை அவமதிப்பதா! (கோபத்தைக்காட்டும் சிறிப்புடன்) நன்றாயிருக்கிறது! "நாய் சிங்கத்தின் பிடரியைப்பிடித்து இழுப்பதா? கன்றுக்குட்டி புலியைச் சிறைபிடிப்பதா! ஹா ஹா!—இக்கணமே அப்பாதகனை ஒழிக்கின்றேன், மாளவத்தை அழிக்கின்றேன்! சேனாதிபதி!

சேனாதிபதி :—மகா ராஜா.

ரா. நமது படைகளை சீக்கிரம் தயார் செய். புறப்படுவோம், மாளவமன்னனை எதிர்க்க; தம்பி! நாம் வரும்வரையில் ராஜ்யகாரியங்களைக்கவனித்துவா! நீ இளவரசல்லவா!

ஹர்ஷர் :—அப்படியே அண்ணா!

காட்சி 3

இடம் :—தனேசர் அரச சபை.

பாத்திரங்கள் :—ஹர்ஷர், சபையோர், முதியோர்.

ஹர்ஷர் : சபையோர்களே! நமதுஅருமைச்சகோதரர் வெற்றியடைந்ததும் மாளவதேசத்து அரசனுடைய சூழ்ச்சியால் கொல்லப்பட்டதால், உங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி இப்போது தனேசருக்கு அரசனாக ஒப்புக்கொண்டோம், ஆயினும் நமது முதற்கடமை நமது சகோதரியின் கணவனையும், நமது சகோதரனையும் கொன்ற மாளவ மன்னனை மண்ணாக்கிவிட்டு நமது அருமைச் சகோதரியை மீட்டு வரவேண்டும்.

சபையோர் :—அப்படியே அரசே!

சீக்கிரம் தாங்கள் வெற்றியுடன் திரும்புவீராக! ஜய விஜ பீபவ.

காட்சி 4

இடம் :—விந்திய மலைக்காடு (தீ வளர்ந்தெரிகிறது) ஒரு ஸ்திரீ நிற்கிறாள்.

ஸ்திரீ :—பிரபாகரவர்த்தனருக்கு அருமை மகளாகப்பிறந்து, கன்னோசி அரசர் மனைவியான எனக்கு இப்படிப்பட்ட முடிவா! உம்! விதியை வெல்ல யாரால் முடியும்! மானம் பெரிதே தவிர! உயிர் பெரிதல்ல. இதுவே வீர சொர்க்கத்திலிருக்கும் என் கணவரைச்சேர வழி. (தீயில் குதிக்கப்போகும் போது.)

ஹர்ஷர் :—நில்! ராஜ்யஸ்ரீ! தீயில் விழாதே! ஹர்ஷன் வந்தேன். (ஹர்ஷன் ஓடிவந்து ராஜ்ய ஸ்ரீ யை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு) அக்கா! ஒரு நிமிஷம் கழித்து வந்திருந்தால் தானேசருக்கு அரசன் இல்லாமல் போயிருக்கும்.

ராஜ்யஸ்ரீ :—அதெப்படி ஹர்ஷா?

ஹர்ஷர் :—என் அருமைச் சகோதரனையும் இழந்துவிட்டு உன்னையும் இழந்து நான் உயிர்தரிப்பேன் என்று எண்ணுகின்றாயா?

ராஜ்யஸ்ரீ :—இல்லை தம்பி! உன்னைக்கண்ட ஆனந்தத்தில் யோசிக்கும் சக்தியே போய்விட்டது.

ஹர்ஷர் :—அக்கா! நம்முடைய ஆயிருள்ளவரையில் நாம் இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியக்கூடாது! உன்னுடைய உதவியால் தான் நடு நிலைமையுடன் நான் ராஜ்யத்தை ஆளவேண்டும்.

ராஜ்யஸ்ரீ :—அப்படியே கடவுள் அருள் புரிவாராக!

மங்களம்.

690 008

நமது மாணவர்கட்கு
(பழைய அல்லது புதிய)

ஒரு வெள்ளிப் பதக்கம்

நிகழும் 1946-ம் வருஷம் பெபுருவரி மாதம் 28-ம் தேதிக்குள்ளாக நமது 'பூங்கோத்து'-க்கு அதிகப்படியான புதிய சந்தாக்களை வசூலித்து அனுப்பும் பழைய அல்லது புது மாணவர்க்கு ஒரு **வெள்ளிப் பதக்கம்**, R. இக்னேஷஸ் ஜெகநாதன் அளித்துள்ளார். சந்தாக்கள் 10-க்கு குறைந்தால் பதக்கம் அளிக்கப்படமாட்டாது. புதிய சந்தாக்களை வசூலித்து அனுப்பும் பழைய மாணவர்கள், தங்கள் பயின்ற வருஷமும், கிரேடும், நம்பரும் தெரியப்படுத்தவேண்டியது.

பத்திராதிபர்

கிராமவாசிகளின் ஏற்றப்பாட்டு

(கொத்து 36, மலர் 5, பக்கம் 88-ன் தொடர்ச்சி)

3-ம் பதியம்

[ம. குழந்தைசாமி]

விவசாயிகள் உலகிற்கு பெரிய உபகாரிகளாய் இருக்கிறார்கள். எப்படியெனில் இவ்வுலக மக்கள் எல்லோருக்கும் வேண்டிய உணவுப் பொருள்களை சம்பாதித்து கொடுக்கிறார்கள். அவர்கள் இல்லாவிடில் உலகில் எவ்வளவு மனிதர்கள் பசியின் கொடுமையால் இறக்க நேரிடும் அல்லவா? கிராம மக்கள் நாகரீகமில்லாமலிருப்பதைப் பார்த்து நகர மக்கள் கேலி செய்கிறார்கள். நாகரீகம் எதற்கு? சுத்தமாயிருந்தால் போதாதா? சுகாதார விதிப்படி நடந்தால் போதாதா? நாகரீகம் தான் சோறு போடுகிறதா? நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என கேள்விபட்டதில்லையா? நோயற்ற வாழ்வுக்கு வேண்டிய அச் சுகாதாரம் கிராமவாசிகளிடம் குறைவாக காணபடுகிறதே என்று சிலர் கேட்கலாம். அதற்குத்தான் தற்காலத்திலுள்ள சுகாதார உத்தியோகஸ்தர்கள் பாடுபடுகிறார்கள். மேலும் ஆரம்ப ஆசிரியர்கள் தற்காலத்தில் "போதனுமுறைபள்ளியில் இருக்கும்போதே புதிய முறைகளைக் கையாடி பயிலுகிறார்கள். மேலும் ஆசிரியத் தொழிலை மேற்கொண்ட பிறகு கிராமமக்களிடம் சுகாதாரத்தைப்பற்றி அடிக்கடி கூட்டங்கள் கூடியும், கண்காக்ஷிகள் வைத்தும் கிராமமக்களை தங்கள் தோழனாக வைத்துக்கொண்டு சுகாதார வழிகளை வெகு சுலபமாயும் எளிதாகவும் புகுத்துகிறார்கள். அதனால் ஆரம்ப ஆசிரியனை கிராம பேருபகாரி எனலாம். சுகாதார விதிகளை மேற்கொண்ட கிராமமக்கள் வேலைகள் செய்யும்போது சில பாட்டுகள் பாடுகிறார்கள் அவைகள் நகர மக்களுக்கு பிடிக்கவில்லை. அதிலுள்ள அர்த்தங்களை கண்டு பிடிப்பார்களானால் தாங்களே அப்பாட்டுகளைப் பாடிக்கொண்டு வேலைகள் செய்ய பிரயத்தனப்படுவர். (இம் மூன்றும் பதியத்தில் உலாவகூப்பிடும் தன் கணவனுக்கு பார்த்த இடங்களுக்கு போக வேண்டாம் என்று பதிலுரைக்கிறாள்.)

இருபதியா ஒன்று, இருபதியா இரண்டு
இருபதியா மூன்று, இருபதியா நான்கு
இருபதியா ஐந்து, இருபதியா ஆறு
இருபதியா ஏழு, இருபதியா எட்டு

புருஷன்: இருடி பெண்ணே போவோம் (நாமும்) காடிவனம் பார்க்க.

மனைவி: காடிவனம்மெல்லாம் (நாமும்) கண்டவனம் தானே.

புருஷன்: பொறுடி பெண்ணே போவோம் (நாமும்) பூங்காவனம் பார்க்க.

மனைவி : பூங்காவனமெல்லாம் (நாமும்) புகுந்தவனம் தானே.
புருஷன்: நடடிப்பெண்ணே போவோம் (நாமும்) நந்தவனம் பார்க்க.
மனைவி : நந்தவனமெல்லாம் (நாமும்) நடந்தவனம் தானே.

(தொடரும்.)

ஆசிரியர் சங்க ஆண்டு விழா—மேல் உழவூர், தஞ்சாவூர் தாலுக்கா

மேல உழவூர் (29-12-'45) ஆசிரியர் சங்கத்தின் ஆண்டு விழாக் கொண்டாட்டம் 23-12-'45 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு மேல உழவூர், போர்டு ஆண்பாடசாலைக் கட்டிடத்தில், தஞ்சை ஜில்லா கல்வியதிகாரி, ஸ்ரீமான் T. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் தலைமையின்கீழ் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கடவுள் வணக்கத்திற்குப் பின்னர் சங்கமைச்சர் அவர்களால் ஆண்டின் அறிக்கை வாசிக்கப்பட்டது.

மேல உழவூர், சூழியவாய்க்கால், வாண்டையானிருப்பு ஆகிய பாடசாலைகளின் மாணவ மாணவிகளால் பலவித உரையாடல், சொற்பொழிவு, கும்மி, சங்கீதம் முதலியன நடைபெற்றன.

தலைவர் முடிவுரையாகப் பேசுகையில், ஒவ்வொருவருடைய மலைக் கட்டிடமும், அழகாகவும் சுத்தமாகவும் வைக்கப்பட்டு, வீட்டிலிருக்கும் பிள்ளைகளைக்கூடப் பாடசாலைக்கு வரும்படி, அழைக்கத்தக்கதாயிருக்க வேண்டுமெனவும், ஒவ்வொரு பாடசாலையிலும் தினந்தோறும் வகுப்பு ஆரம்பத்திற்கு 15 நிமிடம் முன்னதாக மாணவர்களின் சுத்தம் நன்கு கவனிக்கப்படவேண்டுமென்றும், ஆசிரியர்கள் தாங்கள் மேலும் மேலும் புதுப்புது விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமெனவும் கூறிமுடித்தார். சங்கத்தலைவர், ஸ்ரீ R. சீனிவாச கோபாலய்யங்கார் அவர்களாலும், அமைச்சர், T. V. ராமசாமி அவர்களாலும் நன்றி கூறப்பட்டு மாலைகள் சூட்டப்பட்டன. இராஜ வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

விகடத்துணுக்கு

ஆசிரியர் : ஒருவனுக்கு பாம்பு கடித்துவிட்டால், கடித்த இடத்துக்குமேல் கயிற்றால் இறுகக்கட்டி, கடித்த இடத்தில் கத்தியால் கீறிவிட்டு, வாயில் புண் இல்லாதவர் இரத்தத்தை உறிஞ்சி உமிழவேண்டும்.

மாணவன் : கழுத்தில் கடித்துவிட்டால், கயிற்றை எங்கே ஸார் கட்டுகிறது?

Hariharan.

இருண்ட இதயம்

[கோஹினூர்]

[இருண்ட இருதயத்தில் வெளியாகும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல!]

(கொத்து 36, மலர் 4, பக்கம் 88-ன் தொடர்ச்சி)

3. அம்மையின் நடனம்!

கண் விழித்துப்பார்த்தேன். ஜோதி அழுதுகொண்டிருந்தாள். என் பெற்றோரும் எதிரே கலங்கிய கண்களுடன் வீற்றிருந்தனர். "அப்பா! என் வயிற்றில் பாலை வார்த்தாயே! இந்த 20 நாளும் துடித்துக்கொண்டிருந்தேனே!" என கதறினார்கள் என் தாயார்! நான் ஜன்னியில் விழுந்து 20 நாள் ஆகிவிட்டதாம்! அத்தை வந்தார்கள்! "திருடி உனக்கு எலுமிச்சை சாற்றை கொடுத்து ஜன்னியை வரவழைத்து விட்டாளே! நல்லவேளை பிழைத்தாய்! அவளையும் நன்றாய் அடித்து விட்டேன் இன்னும் இரண்டு நாளில் தேறிவிடுவாய். பயப்படாதே!" என்றார்கள் அத்தை!

இரண்டு நாள் கழிந்தது! என்னை உடனே விரகாலூருக்கு வரும்படி வற்புறுத்தினார்கள். எனக்கு பிரியமில்லை! ஆனால் இந்த அன்பு வெள்ளத்தில் மூழ்கி மகனை பறிகொடுப்பதற்கு எந்த பெற்றோர்தான் இணங்குவார்கள்? என்னை உடனே விரகாலூருக்கு கொண்டு சென்றார்கள். என்னிதயம் இருண்டது! ஜோதியில்லாததாலோ என்னமோ தெரியவில்லை. உலகமே வெறிச்சென்றிருந்தது விரகாலூரில்!

* * * *

காலண்டர்கள் இதற்குள் பத்து மாறிவிட்டன! அடிக்கடி ஜோதியை சந்தித்தேன்! மனம் விட்டுப் பேசிக்கொண்டோம் பல விஷயங்களை, ஆனால் என்னமோ சொல்வதற்கு துடிக்கும் மனம் சொல்லத் தெரியாது அமைதியற்றிருந்தது! அந்த நிலையில் எங்கள் கண்கள் மாத்திரம் ஏதோ பேசிக்கொள்ளும்! அவளது பார்வையிலிருந்து பாய்ந்து வரும் பிரேமை வெள்ளம் என்னிதயக்கடலில் சங்கமமாகும்! இந்நிலையில் என் சிறிய அக்காளுக்கு திருமணம் நடத்த வீட்டார் உத்தேசித்திருந்தனர்! அதுவும் மேட்டூரிலேயே!! என் மனம் களிப்பால்துள்ளிற்று. இந்த சமயம் ஜோதியிடம் கண்டிப்பாக மனத்தில் துள்ளித்திரியும் எண்ணங்களைச் சொல்லிவிடுவது எனத் தீர்மானித்தேன். அத்தீர்மானத்துடன் அக்காளுடைய வாழ்வும் பிரகாசிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டே மேட்டூருக்குச் சென்றேன். திருமணம் முடிந்தது! மாங்கல்யம் தரிக்கப்பட்ட என் சகோதரியும் அவள் கணவனும் காரில் ஊர்வலமாக வந்தார்கள். அந்த கண்கொள்ளா காட்சியை ஆனந்தக் கண்ணீரோடு அத்தை வீட்டுத் திண்ணை

யில் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தேன்! என் அருகில் ஒருவரும் இல்லே! இந்த பேதை பையனே யார்தான் சட்டை செய்வார்கள்?

தனிமையாக இருந்த என்னே நோக்கி யாரோ வருவதுபோல எனக்கு தோன்றியது! சட்டென்று திரும்பி பார்த்தேன்! ஜோதி தான்! ஜோதியைப்பார்த்தும் என்னிதயத்தில் மின்ஸாரம் தாக்கியது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. அதே உணர்ச்சி உங்களுக்கும் ஒரு காலத்தில் ஏற்பட்டிருக்கும் அல்லவா? "ஜோதி" என்றேன். ஜோதி சிரித்துக்கொண்டே என் அருகில் உட்கார்ந்தாள். எனக்கு இதயத்தில் அளேகடந்த ஆனந்தம் உண்டாயிற்று. "என்ன ஸாம்! உங்கள் கல்யாணத்திற்கு கோச்சா? காரா?" (car) என்ருள் ஜோதி! நானும் துணிவுடன் பேச ஆரம்பித்தேன்.

"உனக்கு எது பிரியம்?"

"என் பிரியத்தை ஏன் கேட்கவேண்டும்?"

"பெண்ணிற்கு பிரியமானது எனக்கும் பிரியம் தான்!"

"என்ன? பெண்ணு?"

(சாந்தமாக) ஆமாம்! என் ஜோதி உனக்கு பிரியமில்லேயா?

"………(மௌனம்)………"

"ஜோதி!"

(ஆழ்ந்த பெரு மூச்சுடன்) "ஸாம்!"

"என்னிதயக்கோயிலின் ராணியார் தெரியுமா?"

"கனவிலா?………நினேவிலா?………"

"வாழ்க்கை இன்பத்தில்தான்!……"

"மனக்கோட்டைகள் வேண்டாம் ஸாம்!"

"ஜோதி!………என் பிரிய மில்லேயா?………"

"………ஸாம்!……உங்களுருவத்தை இதயத்தில் 10 வருடமாக அணேத்துக்காக்கிறேன்! என்னிதயராஜன் நீர்! என் வாழ்வின் ஜோதி நீர்!………ஆனுல்………"

"………ஆனுல் என்ன ஜோதி?"

"ஏதோ ஒருவித பயங்கரம் என் மனத்தில் தோன்றுகிறது. ஸாம்!……அருமை ஸாம்! நாம் பிரிந்து விடுவோமா?………கடவுள் நம்மை………"

"கண்மணி!………பிரிக்கமாட்டார்."

"இல்லே! ஸாம்!……இல்லே! உண்மைக் காதலுக்கு ஊறு ஏற்படுத்தி வேடிக்கை பார்ப்பதுதான் தெய்வத்தின் திரு விளேயாடல் ஆகும்………"

"கலங்காதே கண்ணே!"

"கலக்கமா? மனவைராக்கியத்திற்கு கலக்கமா? இல்லே! ஒருக்காலும் இல்லே. நீங்களும் என்னே நேசிப்பதாக அறிந்தபின்………பயமேன்?………நாஞேர் பாக்கியசாலிதான்! ஸாம்!………"

"ஜோதி!" அவளது கைகளைப்பற்றினேன். அப்படியே என் மடியில் தன் தலையை சார்த்திக்கொண்டாள். தூரத்தில் போய்க்கொண்டிருந்த ஊர்வலத்தை காட்டினேன். அந்த கண்களில் ஜீவ ஒளி தென்பட்டது! மௌனமாக இருந்த ஜோதியைக் கூப்பிட்டேன்! பதிலில்லை. அவளது கண்ணீர் என் மார்பை நனைத்தது. அவள் அழவில்லை. ஆனந்தக் கண்ணீர் போலும்!

இருவரும் எழுந்து சாப்பிடச் சென்றோம். ஜோதி சாப்பாடு பரிமாறினாள். ஜோதியின் கைப்பட்டதனாலோ என்னமோ சாப்பாடு அதிக சுவையுடன் விளங்கியது.

"எல்லாவற்றையுமா சாப்பிட்டு விடுவீர்கள்?"

"ஆமாம்"

"மீதியே வைக்கும் வழக்கம் இல்லையோ?"

"சாப்பிட வேண்டாம் என்கிறாயா?"

"அப்படிச் சொல்லவில்லை ஸாம்! மீதி யிருந்தால் வைத்து விடலாமே என்கிறேன்."

"ஏன்?"

"அளவுக்கு மிஞ்சினால்............................"

"அன்பு கூடவா அளவுக்கு மிஞ்சினால் நஞ்சாகிவிடும்"

......(மௌனம்)......

நானும் அவள் விருப்பப்படியே இலையில் மீதி சாப்பாட்டை வைத்து விட்டு எழுந்தேன். "ஏன் அவள் என்னை மீதி சாப்பாட்டை வைக்கச் சொல்லவேண்டும்?" என்று துடங்கியது மனம் ஒரு போராட்டத்தை! "ஒருவேளை பிற்காலத்தில் சிக்கனமாக சாப்பிட்டு ஆஸ்தி சேர்ப்பதற்கு இப்பொழுதே பயிற்சியளிக்கிறாளோ? இருக்கலாம்!" என எண்ணிக்கொண்டே மறைவிலிருந்து அவள் என்ன செய்கிறாள் என்பதை கவனித்தேன். நான் மறைந்து கொண்டது அவளுக்குத் தெரியாது. இந்நிலையில் அவள் நான் மீதிவைத்த அந்த சாப்பாட்டை ......ஆவலுடன்......சாப்பிட்டாள்! அதில் என்ன ஆனந்தம் கண்டாளோ தெரியவில்லை? அவளது மனம் இதில் களிப்படைவதைக் கண்டு ஆனந்தக்கண்ணீர் விட்டேன். இதற்குள் அத்தை "ஸாம்" என்று கூறிக்கொண்டே வந்தார்கள். அத்தைக்கு எதிரில் சென்றேன். அத்தை என்னை ஒரு ரூபாய்க்கு காய்கறிகள் வாங்கி வரும்படி சொன்னார்கள். மாலை 3 மணி இருக்கும். நான் லால்குடிக்குப் புறப்பட்டு விட்டேன். சாயந்திரம் 5 மணிக்குத் திரும்பினேன்.

அத்தையிடம் காய்கறிகளைக் கொடுத்தேன், அத்தை "ஸாம்! இப்போதுதான் காப்பியெல்லாம் குடித்துமுடித்தோம். உன்னை மறந்தே விட்டேன். ஒருவருமே ஞாபகப்படுத்தவில்லை." என்று கூறி வருத்தப்பட்டார்கள். நானும் "பரவாயில்லை" என்று சொல்லிவிட்டு ஆத்திரத்துடன் வெளியேறினேன். அத்தை வீட்டுத்தோட்டத்தில் போய் உட்கார்ந்துகொண்டேன். மனம் கொதித்துக்கொண்டிருந்தது.

காப்பியில்லாவிடில் ஒருவரும் இறந்துவிடமாட்டார்கள். ஆனால்...... ஜோதிக்குமா என் ஞாபகமில்லை?...ஜோதியுமா மறந்துவிட்டாள்?... என எண்ணும்போது என் மனம் அப்படியே குன்றிப்போய்விட்டது! ஆழ்ந்தகவலையுடனும் பெருமூச்சுடனும் அங்கேயிருந்த ஒரு கட்டிலில் படுத்தேன். எதையோ கற்பனைசெய்துகொண்டு கண்கள் தாமாகவே நீரைச் சொரிந்தன! கண்களில் துன்ப அருவியும், இதயத்தில் இன்ப அருவியும் ஓட ஆரம்பித்துவிடும்!

படுத்திருந்த என் கண்களையாரோ மூடினார்கள். கைகளை எடுத்துப்பார்த்தேன். 10 வருடத்திற்குமுன் நடந்த ஓர் சம்பவம் படக்காட்சிபோல் இதயத்தில் மின்னி மறைந்தது! அதேஜோதிதான் இப்பொழுதும் கண்களைப்பொத்தினாள். 'கல கல' என சிரித்தாள். நான் வேறுபக்கம் தலையைத் திருப்பிக்கொண்டேன்.

"ஏன் ஸாம் கோபமா?......"

"சீ!......இப்பொழுதுதான் என் ஞாபகம் வந்ததா?......"

"இந்தாருங்கள் ஓர் அழகான கைகுட்டை! உங்களுக்காக இப்பொழுது சிரமப்பட்டு போட்டேன்"

"போதும் பாசாங்கு!......உன்னை நம்பி இங்கே இருக்கையில் நீயே என்னை மறந்தால்......"

"எப்பொழுது?"

"இப்பொழுது ஞாபகமிருக்குமா?......காப்பி நீமட்டும் குடித்தாயே! என்னை மறந்துவிட்டாயா?......உன்னுள்ளம் அப்பொழுது எங்கே சென்றது?"

"காப்பியா?......"

"இருக்கும்! தெரியாததுமாதிரி கேட்கிறாயே! உன்னை நம்பி உன் அன்பின் நம்பிக்கையில்தானே......

என பேச்சை முடிக்குமுன் ஜோதியின் அக்காள் வந்தாள். "ஜோதி! நீ காப்பிகுடிக்கவில்லையா? எல்லாம் ஆகிவிட்டதுபோ! எங்கே சென்றிருந்தாய் இவ்வளவு நேரம்?" என்றாள் ஜோதியின் தமக்கை. ஜோதி பதில்பேசவில்லை. நானும் திக்பிரமையடைந்து கல்போல் நின்றுவிட்டேன். "இதற்குள் உன் ஜோதியின்பேரில் எவ்வளவு பெரிய அபாண்டம் சுமத்திவிட்டாய்" என என்மனம் இடித்துக்காட்டியது! நீர் நிறைந்தகண்களுடன் நிமிர்ந்தேன். ஜோதியின் அக்காளைக்காணோம். "ஜோதி," இதற்குமேல் பேசமுடியவில்லை. "ஸாம்" என்று கூறி என் மடியில் தன் முகத்தைப்பொதிந்து விக்கி விக்கி அழுதாள். "ஸாம்......என் மீதுமா அவநம்பிக்கை?...... பெண்களின் ஹ்ருதயம் தீக்கு ஒப்பானது இல்லையா?......தீயையும் சந்தேகித்து சோதிப்பதுண்டா?......நீங்களே என்னை நம்பாவிடில் ......" குலுங்கி, குலுங்கி அழுதாள். அவளைத்தேற்றி மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன். இருவரும் ஒருவருக்கொருவர் மன்னித்துக் கொண்டோம். என்னைத்தவிர வேறொருவரையும் உன் உத்தரவு

அன்னியில் மணப்பதில்லை என்று அவளிடம் வாக்குபெற்றுக்கொண்டு விரகாலூர் சென்றுவிட்டேன். கலியாணம் எத்தனை நாளைக்குத்தான் நடக்கும்?

* * * *

ஊரெங்கும் அம்மைக்கு பலியானவர்களும் அநேகர். இந்த நிலையில் ஜோதியிடமிருந்து கடிதம்வந்தது. அம்மைவியாதி வந்திருக்கிறது. உடம்பை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளவும்! இதுதான் கடிதத்தின் சாராம்ஸம். நானும் அம்மைக்கு பயப்படவே இல்லை! கூடுமானவரை சுகாதாரவிதிகளை அனுஷ்டித்து வந்தேன். ஆனால் தெய்வசங்கற்பம் யாரைவிட்டது? ஜுரம் என்று படுத்தேன்! மூன்றும் நாள் தேகம் எங்கும் முத்துகள். முகத்தில் முத்துக்களின் எண்ணிக்கை அநேகம். கணக்கில் அடங்காதமுத்துக்கள்! இந்நிலையில் இளநீர், மோர் முதலியவைகளை சாப்பிட்டேன் அநேக நாட்களுக்குப்பின் அம்மை இறங்கியது. ஆனால் என்னைப்பார்ப்பவர்கள் யாவரும் எனக்காகபரிதாபப் படுவதுபோல் முகத்தைக்காட்டினார்கள். அகத்தின் அழகு முகத்தில் தெரியாதா? ஏன் என்று எனக்கு விளங்கவில்லை. படுக்கையைவிட்டு எழுந்தேன். தலைக்கு தண்ணீர் விட்டார்கள்! வீட்டில் கண்ணாடியை தேடினேன் முகம்பார்க்க. கண்ணாடியைக்காணோம்! அடுத்த வீட்டில் கண்ணாடியிருந்தது. ஆவலால் கண்ணாடியை எடுத்து முகத்தைப்பார்த்தேன். திக்பிரமையடைந்தவன்போல் திடுக்கிட்டேன். கைநழுவியது! கண்ணாடி 'படார்' என்ற ஓசையுடன் கீழே விழுந்து நூறுதுண்டாக ஆகிவிட்டது. அதேசமயம் என் ஹ்ருதயமும் உடைந்து எண்ணமாகிய அலைகள் கண்ணீர் மழையுடன் இதயத்தில் வீசிக்கொண்டிருந்தது! ஏதோ ஒன்றை பறிகொடுத்தவனைப்போல நின்றேன். இதயத்தில் பற்பல எண்ணங்கள் சுழன்றது!

(தொடரும்.)

குறிப்பு:—சென்ற இதழில் வெளிவந்தது. இருண்ட இதயத்தின் இரண்டாவது அத்தியாயமான "பால்ய பழக்கம்" என்பதை வாசகர்களுக்கு நினைவூட்டுகிறேன்.

உதிர்ந்த இதழ்கள்

[ராஜி]

V நற்குணங்கள்

1. உலகத்திலுள்ள உயரிய குணம் மாசற்ற அன்பும், தயையுமே!

2. பிறருக்கு இரங்கு; அப்பொழுது நீ இரக்கம் பெறுவது உறுதியாகும்!

3. பொறுமையாயிரு. ஏனெனில் பொறுமையினாலேயே நீ உலகத்தையே வென்று விடலாம்!

4. திருப்திபடுவதனால் மனிதனது ஆயுள் விருத்தி ஆகிறது.

5. துன்பத்தை எதிர்பார்த்தால் அது வந்தபொழுதும் சகித்துக்கொள்ள பலன் கிடைக்கும்.

6. யாவரிடமும் களங்கமற்று பேசு. களங்கமற்று பழகு. அதனால் ஜனசமூகத்தில் பேர் பெற்றவனாக ஆவாய்!

7. சிரித்த முகத்துடனிருந்தால் யாவரையும் கவரலாம்.

8. வீரனாக விளங்கு. உன்னைப்பெற்றவர்கள் மகிழ்வார்கள்.

VI தீக்குணங்கள்

1. பொறாமை கொள்ளாதே. அது உன்னை அணு, அணுவாய் கரைத்து கடைசியில் உன்னையே அழித்துவிடும்!

2. மன ஆறுதலைத்தேட தற்கொலை சிறந்த வழியல்ல!

3. கோபத்திற்கு அடிமையாகாதே!

4. உன் மனத்தை நீ நம்பாதே! அது உன்னை இன்பசிகரத்திற் கேற்றி துன்ப பள்ளத்திற்கு வீழ்த்திவிடும்.

5. பொய் புகலாதே என்பது சரியல்ல! அனாவசியமாக பொய் புகலாதே!!

6. கொலைஞனாகாதே! கொலையின் பாவம் உன்னை மட்டுமல்ல உன் பிள்ளைகளையும் பின்பற்றும்.

7. பேராசை கொள்ளாதே! அது உனக்குள்ளதையும் அழித்துவிடும்.

8. மனத்தை நம்பாதே! அது கடிவாளமில்லாத குதிரையாகும். அதனை நம்பி சவாரி செய்தால் ஓர் ஆழ்ந்த பள்ளத்தைதான் எதிர்பார்க்கவேண்டும்.

"தூங்கினவன் கண் கெடா கண்"

[S. Chinnappa]

கந்தன், முருகன், இருவர்களும் பக்கத்து வீட்டுக்காரர்கள். இவர்கள் ஒரு சிறிய கிராமத்தில் வசித்துவந்தார்கள். இவர்கள் செல்வம் எல்லாம் ஆடு, மாடு, கோழி, இவைகள்தான். இவர்கள் பெரும்பாலும் எருமைமாடுகள்தான் வளர்த்தார்கள்.

கந்தன் வீட்டிலும், முருகன் வீட்டிலும் ஒரு எருமைமாடு சினையாகவிருந்தது. இரண்டு மாடுகளும் ஒரே நேரத்தில் கன்றுபோடும் சந்தர்ப்பத்திலிருந்தது. இருட்டிவிட்டபடியால் இருவரும் இரவெல்லாம் விழித்திருக்கும்படி நேரிட்டது. இருவரும் நெடுநேரம் விழித்திருந்தார்கள். அவர்களுக்குத் தூக்கம் சொக்கிக்கொண்டிருந்தது. சற்று கீழே தலைசாய்த்தபிறகு விழித்துவந்து பார்த்துக்கொள்ளலாம் என்ற எண்ணமும் தோன்றிற்று.

உலக வழக்கு என்னவென்றால், பசுமாடு காளைக்கன்றும் எருமை மாடு "கெடேரி"க்கன்றும்தான் போடவேண்டும் என்பது. அப்படிப் போட்டால்தான் நல்ல விலைக்கு விற்கமுடியும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

கந்தனுக்குக் கடுமையான தூக்கம் வந்துவிட்டது. அவனால் தூக்கத்தை சமாளிக்கமுடியவில்லை. உடனே வீட்டிற்குள்போய் படுத்துக்கொண்டான். ஆனால் முருகன் விழித்த பேர்வழி. அவன் தூக்கத்திற்கு இடம் கொடுக்கவில்லை. தூக்கத்தை விரட்டியடித்துவிட்டான்.

சில நிமிஷங்களுக்கெல்லாம் கந்தன் எருமை 'கெடேரி' கன்றும் முருகன் எருமை கடாகன்றும் போட்டன. அந்த விழித்த பேர்வழி முருகன் தன் "கெடா" கன்றை, கந்தன் எருமையிடம் போட்டுவிட்டு அவன் "கெடேரி"க்கன்றை தன் மாட்டிடமும் விட்டான்.

கந்தன் விழித்துக்கொண்டு வந்துபார்த்தான். "கெடா" கன்று என்று தெரிந்தவுடன் ஏமாற்றமடைந்தான். அதனால்தான் தூங்கினவன் கண் (கந்தன் கன்று) "கெடா கண்" ஆயிற்று என்று அறிகின்றோம்.

தூங்கினவன் கண் என்பது "கெடா கண்". தூங்கினவன் = அயர்ந்து நித்திரை செய்தவனுடைய, கண் = இரு கண்களும், கெடா = கெட்டுப் போகாத (நல்ல), கண் = கண்களாகும் என்று கூறுவாருமுளர்.

2/10007
சென்னை 600 003

முதுகுளத்தூர் முஸ்லீம் உயர்தர ஆரம்பப்பாடசாலை பெற்றோர் சங்க

ஆண்டு விழா

1945-௵ டிசம்பர்-௴ 21-௳ மாலை 6-30 மணிக்கு முதுகுளத்தூர் முஸ்லீம் ஸ்கூலில் பெற்றோர் சங்க ஆண்டு விழா முதுகுளத்தூர் ரேஞ்சு கல்வி அதிகாரி, ஸ்ரீ S. மானேந்திரியப்ப பிள்ளையவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் ஷை ஸ்கூல் மாணவர்கள் "உண்மையின் பெருமை" என்ற நாடகத்தை பொது ஜனங்கள் மிக பாராட்டத்தக்க விதத்தில் நடித்துக்காட்டினார்கள். தலைவர் போட்டி பந்தய விளையாட்டுகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கியதுடன் "கட்டாய ஆரம்ப கல்வித்திட்டமும் பெற்றோர் கடமையும்"—என்ற விஷயம்பற்றி விரிவாகப்பேசினார். பெற்றோர்கள் மனமுவந்து அளித்த நன்கொடையால் விழா சிறப்பாக நடைபெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

T. Kesavaraman,
H. M. Muslim School.

சங்கீதம்

புதுவருஷ வாழ்த்து

(By B. Thomas Victor, Music Teacher.)

29. இராகம்: ஹம்ஸத்வனி — ஸரிகபநிஸ்
ரூபக—தாளம் — ஸ்நிபகரிஸ

(" மனஸாகரகதேமேஸ்ரீ " என்ற வர்ணமெட்டு)

பல்லவி

ஸ்ா நீ பா கா ரீ ஸ்ா	கா ; ரீ ஸ ரி ஸ நி பா ‖
மன மகிழ் புது	ஆண் டினில் பு . கழ் ‖
ஸா ; நீ ஸா காரீ	ஸ்ா ; கா பா . நி ஸ் ரீ ‖
வாழ்த் துரை பகர்	வோம் தின மே. . ‖

Reg. No. M. 1534.

அனுபல்லவி

பாபா நீ நீ ஸ் ா ; || ; ; ; ; ஸ் ரி ஸ் நி ||
கரு ணைநி றை . || . . . . ||
பாபா நீ நீ ஸா ; || கா ; ரீ ; ஸ் ரி ஸ் ரி ||
கரு ணைநி றை || . . . . ||
பாபா நீ நீ ஸ் ா ; || நீ ஸ் ா ரீ கா ரீ ; ||
கரு ணைநி றை || பர னரு ளே . ||
கா ; ரீ ஸ் ா ஸ் ா ரீ || ஸ் ா நீ பா கா பா நீ ||
பா . ரினில் தினம் || சூழ்ந் திலங் கிட || (மன.)

சரணம்

பா கா ரீ ஸா ரீ ; || கா ரீ ஸ நி ஸ ரி ஸ நி பா ||
செல்வம் பொரு ளும் || சீர ருள்யா . வு . மே ||
பா ஸா நீ ஸா ரீ கா || ஸா ஸா நீ ரீ ஸா ; ||
சிறப் புடன் புவில் || ஜொலித் திலங் க . ||
பா கா பா ரீ கா பா || நீ பா கா ரீ ஸா ஸா ||
கல்வி யறி உயர்ந் || தெங்கும் புக ழ . ||
ஸா கா ; ரீ ஸ ரி கா || ஸா ஸா நீ ரீ ஸா ; ||
கீர்த்தி . யோ ட . னு || தின மேவா ழ . ||
பா கா பா ரீ கா பா || நீ பா கா ரீ ஸா ஸா ||
பல்லுழி யாய் பல || கலை கள்கற் றே . ||
ஸா ரீ கா ஸா ரீ கா || பா பா கா நீ பா ; ||
பறந் தனா . ன || முடன் விளங் க . ||

அனுபல்லவி எடுப்பு

வல்லபரனின் ஆசி நிறைய
பூங்கொத்தினுயர் புகழுறைபாடி. (மன.)

Editor and Publisher: Rev. Fr. A. Lourduswami, B. A., L. T.
Headmaster, R. C. Secondary Training and High School.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. Ty.—I, 12—1—1946.